தென்காசி மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் சேர்ந்தமரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரூபாய் 10.91 கோடி மதிப்பில் 18 புதிய கட்டிடங்களையும்,ரூபாய் 6 கோடி மதிப்பில் 5 புதிய கட்டிடம் ஆக மொத்தம் ரூபாய் 16.91 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினர். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், சதன்திருமலைகுமார் எம்.எல்.ஏ. உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு

தென்காசி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

தென்காசி, ஆக.26 - தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது:-

மருத்துவத் துறையின் சார்பில் பல்வேறு கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு வருகிறது.இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பல்வேறு வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. இன்று 1கோடியே 14 லட்சம் ரூபாய் செலவில் சிறார் திறன் மேம்பாட்டு மையம் திறந்து வைக்கப்பட்டு ள்ளது. இந்த மையத்தில் இந்த மாவட்டத்தில் உள்ள 58 குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர். முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் முதன்முறையாக விழுதுகள் என்ற அமைப்பை தொடங்கி வைத்துள்ளார்கள். பல் வேறு வசதிகளையும் ஏற்படுத்தி மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறிப்பாக பேச்சுத் திறன், நடக்கும் சக்தி,திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தொடர்ந்து வழங்கி வருகிறார்கள்.தென்காசி மருத்துவமனை இத்தகைய குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி வருகிறது.உணர்

திறன் பூங்கா, விளையாட்டுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் 18 படுக்கைகள் கொண்ட கட்டண வார்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மத்திய தர வருவாய் பிரிவினரும், உயர் தர வருவாய் பிரிவினரும் அரசு மருத்துவமனையை பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இது போன்ற கட்டண வார்டுகள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது.இது போன்ற வாடுகள் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவ மனையில் மட்டுமே இருந்தது.தற்போது கோவை, மதுரை, சேலம், பொள்ளாச்சி, கும்பகோணம்,ஈரோடு,விருதுநகர், திருவண்ணாமலை, கிண்டி, திருநெல்வேலி, கோவில்பட்டி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய 16 இடங்களில் திறந்து வைக்கப்பட்ட நிலையில் 17வது இடமாக தென்காசியில் திறக்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு அறையிலும் கட்டில், தொலைக்காட்சி, உடன் இருப்பவர்களுக்கு சோபா,உடைமைகளை வைக்க கப்போர்டு வசதி, நவீன குளியலறை, கழிப்பறை வசதிகள் இருக்கும் கட்டணமாக நாள் ஒன்றுக்கு 1000 ம் அல்லது 1500 என்கின்ற அளவில் குறைந்த கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் தொகுதியை சேர்ந்த மரம்,சாயாமலை, திருவேட்டநல்லூர், செந்தட்டியாபுரம்,கடையநல்லூரில் மேலக்கடைய நல்லூர்,அச்சன்புதூர், சுந்தரேசபுரம் தென்காசி தொகுதியில் சிவகுருநாதபுரம், ஊத்துமலை, வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி, தலைவன் கோட்டை, துரைச்சாமிபுரம், விஸ்வநாத பேரி, ஆலங்குளம் தொகுதியில் கடையம் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்ட 18 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு வருகிறது. திருவேங்கடபுரம், ஆய்க்குடி, வடகரை கீழ்படாகை,அச்சன்புதூர், வாசுதேவநல்லூர் ஆகிய 5 இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.வடகரையில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன்.5 மருத்துவர்களுடன் அந்த மருத்துவமனை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கு இருதயநோய் சம்பந்தமாக 31 பேர் வந்து பயன்பெற்றுள்ளனர்.அதில் நான் ஒருவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்.சிகிச்சை குறித்து மகிழ்ச்சியுடன் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை சொல்லிக் கூறுகிறேன் என்று கூறினார்.

கொரோனா காலத்திற்குப் பிறகு அதிகரித்து வரும் இருதய நோய்களுக்கு நகர்ப்புறங்களை செல்ல வேண்டும் என்ற நிலை மாறி கிராமப்புறங்களில் மருத்துவ வசதி வழங்கி வரும் துணை சுகாதார நிலையங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் என மொத்தம் 10 ஆயிரத்து 999 சுகாதார நிலையங்களில் லோடிங் டோஸ் என்ற மருந்துகள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.இருதய பாதிப்படையில் இருக்கும் பொழுது அடுத்த மூன்று மணி நேரங்கள் கோல்டன் ஹவர்ஸ் என்று அழைக்கப்படுகிறது. இந்த சமயத்தில் லோடிங் டோஸ் கிடைக்காத காரணத்தால் மரணம் ஏற்பட்டு வந்தது. இதயம் காப்போம் திட்டம் துவங்கப்பட்ட பிறகு 19, 546 நபர்களின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

தி.மு.க.அரசு பொறுப்பேற்கும் வரை நாய்,பாம்பு கடிக்கான மருந்து வட்டாரம் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே தரப்பட்டது. ஆனால் நாய் மற்றும் பாம்பு கடி அதிகமாக கிராம பகுதிகளில் தான் இருந்தது.முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலில் கூட மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் 2,686 ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங் களில் பாம்பு கடி, நாய் கடிக்கான மருந்து இருப்பு வைக்கப்பட்டது.இந்தியாவில் தமிழ் நாடு தவிர்த்து வேறு எந்த மாநிலத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு கடிக்கும் நாய் கடிக்கும் மருந்து இல்லை. மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒன்றிய அரசின் பிரதிநிதிகள் யாராவது வந்தால் அவர்களிடம் கேள்வி கேட்கலாம். முதலமைச்சர் அவர்களும் நானும் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம்.15 முறை டெல்லி சென்று தொடர் கோரிக்கை வைத்து வருகிறோம். கலைஞர் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவமனை என்ற திட்டத்தை கொண்டு வந்தார்கள்.ஒன்றிய அரசும் அதனை ஏற்றுக் கொண்டது. 5 மாவட்டங்களில் தற்போது மருத்துவக் கல்லூரிகள் இல்லை.தென்காசி, மயிலாடுதுறை, பெரம்பலூர், ராணிப்பேட்டை உள்பட 5 இடங்களில் இல்லை. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.இரண்டு, மூன்று கிடைத்தாலும் அதில் தென்காசி கண்டிப்பாக இடம் பெறும் என்றார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுபிரமணியன் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,

பொது சுகாதாரத்துறை இயக்குனர் சோமசுந்தரம், தென்காசி மருத்துவப் பணி இணை இயக்குனர் பிரேமலதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின், மாவட்ட சுகாதார அலுவலர் கோவிந்தன்,உள்பட மருத்துவர்கள் மருத்துவ பணியாளர்கள் உடன் இருந்தனர்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேரூராட்சி தாய் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மக்கள் நல் வாழ்வுத்துறை இணை இயக்குநர் செல்வராஜ் , துணை இயக்குநர் குமரகுருபரன், அலங்காநல்லூர் பேரூராட்சி சேர்மன் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணை சேர்மன் சாமிநாதன், கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், ரகுபதி, தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், அருண்குமார், வாடிப்பட்டி பால்பாண்டியன், சத்திய பிரகாஷ், ஜெயராமன், கார்த்திக், மகாலிங்கம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

தென்காசியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில்

ரூ.16.91 கோடி மதிப்பில் 18 புதிய கட்டிடங்கள் துவக்கி - 5 புதிய கட்டிடங்களுக்கான பணி!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து – அடிக்கல் நாட்டினர்!

தென்காசி.ஆக.26 தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் சேர்ந்தமரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் (24.08.2025) அன்று மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்றத் உறுப்பினர் ஈ. ராஜா வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று ரூ.10.91 கோடி மதிப்பிலான 18 புதிய கட்டிடங்களை துவக்கி வைத்தும் ரூ.6 கோடி மதிப்பில் 5 புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேசியதாவது,

திராவிடமாடல்முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவ மனைகளைத் திறந்து வைத்து பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளையும், சேவைகளையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் மருத்துவத்துறையின் சார்பில் பல்வேறு மருத்துவக் கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.இந்த அரசு உங்களுக்கான அரசு,உங்கள் மீது அக்கறை கொண்ட அரசு. முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேசினார்.

மா.சுப்பிரமணியன் பேச்சு!

அதன் பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் மருத்துவத்துறையின் சார்பில் பல்வேறு வகையான கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே மாவட்ட அரசு மருத்துவமனையில் பல்வேறு நவீன வசதிகள் செய்யப்பட்டு வந்த நிலையில் இன்றைய தினம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை யில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான சிறார் திறன் மேம்பாட்டு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிறார் திறன் மேம்பாட்டு மையத்தின் மூலம் 58 குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

சிறார் திறன் மேம்பாட்டு மைய உணர்திறன் பூங்கா!

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் முதல்முறையாக விழுதுகள் என்ற அமைப்பை ஏற்படுத்தி பல்வேறு வாகன வசதிகளை ஏற்படுத்தி,மக்கள் நலத்துறை,மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,சமூக நலத்துறைகளை ஒருங்கிணைத்து குழந்தைகளுக்கு தேவையான பேசும் திறன்,நடக்கும் சக்தி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளித்து வருகிறார்கள். சிறார் திறன் மேம்பாட்டு மைய உணர்திறன் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது, விளையாட்டு உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.86.40 இலட்சம் மதிப்பீட்டில் 18 படுக்கைகள் கொண்ட Pay Wards என சொல்லப் படுகிற கட்டண வார்டுகள் மக்களின் பயன்பாட்டிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.மத்தியதர வருவாய் வர்க்க பிரிவினரும்,உயர்தர வர்க்க பிரிவினரும் இந்த மருத்துவ மனையை பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக அரசு மருத்துவமனைகளில் கடந்த நான்கு ஆண்டுகளாக Pay Wards என சொல்லப்படுகிற கட்டண வார்டுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது!

சேலம், மதுரை, கோயம்புத்தூர், பொள்ளாச்சி,கும்பகோணம், ஈரோடு, கலைஞர் மருத்துவமனை கிண்டி (சென்னை), விருதுநகர், திருவண்ணாமலை, தேசிய முதியோர் நல மருத்துவமனை கிண்டி (சென்னை), திருநெல்வேலி, கோவில்பட்டி,கன்னியாகுமரி, தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை உள்ளிட்ட 16 இடங்களில் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டு தற்போது 17 வது இடமாக தென்காசியிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.இக்கட்டண வார்டுகளில் குளிர்சாதன வசதி, ஐ.சி.யு. கட்டில்,தனி கழிவறை, தொலைக்காட்சி பெட்டி, தண்ணீர் கொதிக்கலன்,உதவியாளர் வசதி என பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும்,விழுப்புரம்,கடலூர், காஞ்சிபுரம் மற்றும் பெரம்பலூர் ஆகிய 4 இடங்களில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தென்காசி மாவட்டத்தில் மொத்தம் ரூ.27.44 கோடி செலவில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.மொத்தம் ரூ.33.65 கோடி செலவில் 27 மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளது. தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம்,மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 2286 ஆரம்ப சுகாதார நிலையங் களிலும்,8713 துணை சுகாதார நிலையங்களிலும்,இருதய பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ஆஸ்பிரின் – 2,க்ளோபிடோக்ரல் – 4, அட்ரோவாஸ்டாட்டின் – 8 என மொத்தம் – 14 மாத்திரைகள் இருதய நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு உயிர்கள் பாதுகாக்கப்படுகிறது.

சங்கரன்கோவில் வட்டாரம் சேர்ந்தமரம் சமுதாய நல நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலான வட்டார பொது சுகாதார அலகு கட்டிடமும், சாயமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டிலான வெளிப்புற நோயாளிகள் பிரிவு கட்டிடமும், திருவேட்டநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலைய கட்டிடமும், செந்தட்டியாபுரம் துணை சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலைய கட்டிடமும்,கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டிலான உடற்கூறாய்வு மையமும்,இலத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வெளிப்புற நோயாளிகள் பிரிவு கட்டிடமும்,மேலக்ககடையநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலான மகப்பேறு பிரிவு கட்டிடமும்,

செங்கோட்டை வட்டாரம்அச்சன்புதூர் மேற்கு துணை சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலைய கட்டிடமும்,சுந்தரேசபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலையகட்டிடமும், தென்காசி வட்டாரம் சிவகுருநாதபுரம் துணை சுகாதார நிலையத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலைய கட்டிடமும், ஊத்துமலைஅரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான துணை சுகாதார நிலைய கட்டிடமும், வாசுதேவநல்லூர் வட்டாரம் சிவகிரி அரசு மருத்துவமனையில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டிலான உடற்கூறாய்வு மையமும், தலைவன்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வெளிப்புற நோயாளிகள் பிரிவு கட்டிடமும்,

வாசுதேவநல்லூர் வட்டாரம் துரைச்சாமியாபுரம் துணை சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய மருத்துவ கட்டிடமும், விஸ்வநாதபேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடமும், ஆலங்குளம் வட்டம் கடையம் வட்டாரம் சமுதாய நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதார அலகு கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார அலகு கட்டிடத்திற்கு அடிக்கல்!

மேலும்,சங்கரன்கோவில் வட்டாரம் திருவேங்கடம் துணை சுகாதார நிலையத்தில் ரூ.45இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடத்திற்கும், கடையநல்லூர் வட்டம் ஆய்க்குடி அரசு மருத்துவமனையில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மருத்துவ கட்டிடத்திற்கும்,தென்காசி வட்டாரம் வடகரை கீழ்பிடாகை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான பொது சுகாதார அலகு கட்டிடத்திற்கும், செங்கோட்டை வட்டாரம் அச்சன்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலான புறநோயாளிகள் பிரிவு கட்டிடத்திற்கும், வாசுதேவநல்லூர் வட்டாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான பொது சுகாதார அலகு கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசினார்.

நிகழ்ச்சியில்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மரு.முத்துலெட்சுமி ரெட்டி உதவி திட்டத்தின் கீழ் 05 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும்,05 பயனாளிகளுக்கு மகப்பேறு சஞ்சீவி (சித்தா) பெட்டகத்தினையும்,நிஷய் போஷன் யோஜனா திட்டத்தின் கீழ் 05 பயனாளிகளுக்கு உதவித்தொகை யினையும், 05 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடு திட்ட அட்டை போன்ற நலத்திட்ட உதவிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால்,இயக்குநர் (பொது சுகாதாரம் (ம) நோய்த்தடுப்பு மருந்துத்துறை, சென்னை) மரு.ஏ.சோமசுந்தரம்,இணை இயக்குநர் மரு.பிரேமலதா, மாவட்ட தலைமை மருத்துவமைனை தலைமை மருத்துவர் ஜெஸ்லின், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன்,வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் பொன்முத்தையா பாண்டியன், (வாசுதேவநல்லூர்) லாலா சங்கர பாண்டியன் (சங்கரன்கோவில்) தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி,பொருளாளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லதுரை, பொதுக்குழு உறுப்பினர் ரஹீம்,சாமித்துரை, ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், திவான் ஒலி, சீனித்துரை,ரமேஷ்,ஜெயக்குமார், பொன் செல்வன்,பெரியதுரை, ராமச்சந்திரன்,நகர செயலாளர்கள் வெங்கடேஷ், கணேசன், அப்பாஸ் பிரகாஷ், பேரூர் செயலாளர் சுடலை, குட்டி,கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், ஒன்றிய குழு தலைவர் சுப்பம்மாள், அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா,முருகன், இஞ்சி இஸ்மாயில்,அன்பரசன்,அழகு தமிழ் சங்கர்,ஐவேந்திரன் தினேஷ், ராமதுரை,பால்ராஜ் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள்,மருத்துவ அலுவலர்கள், அனைத்துதுறை அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பெல் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் பெல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 239/TRI. பேரவை இணைப்புஎண்.298)நிர்வாகக்குழுக் கூட்டம்16.08.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூட்டுக் குழு போராட்டம் நடவடிக்கை செப்டம்பர் 20 ஆம் தேதி வரை நீடிக்க உள்ள நிலை இருப்பதால் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் அல்லது போராட்டம் முடிவுக்கு வரும் நிலை இருந்தால் அதற்குப் பின்னர் தேர்தல் நடத்துவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் செப்டம்பர் 20 ஆம் தேதிக்குப் பின்னர் பெல் தொ.மு.சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் பேரவையால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு நடத்தி முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைஞரகம்
சென்னை-17
நாள்: 25.08.2025

(மு.சண்முகம்,)
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

கிருஷ்ணகிரியில் வர்த்தகர் அணியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது. மாநில துணைச் செயலாளர் கே.வி.எஸ். சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார். மாநில துணைச் செயலாளர் பி.டி. அன்பரசன் முன்னிலை, மாநில செயலாளர் கவிஞர். காசி முத்துமாணிக்கம் தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார்.